# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 56/2024 | வா.சா. | : 3 |
| பெயர் | : ராஜேஷ்கண்ணன் | த/பெ. | : கணேசன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : ஆவிச்சிபட்டி |
| தேதி | : 10.10.2025 | வயது | : 40/2025 |

**1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:**

1. நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, ஆவிச்சிபட்டி கிராம ஊராட்சி செயலராக உள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.8 வரை உள்ள வீட்டுவரி ரசீதுகள் அசல் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணமான வீட்டுவரி ரசீது கணிணி நகல் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது தான். மேற்படி ஆவணங்களானது நடுவனூரைச் சேர்ந்து முகம்மது இஸ்மாயில் என்பவரது மகனான காஜாமுகைதீன் என்பவர் பெயரிலுள்ளது என்றால் சரிதான்.

2. பட்டா உள்ள நபர்களுக்கு தான் வீட்டுவரி ரசீது வழங்கப்படும் என்றால் சரியல்ல, குடியிருப்பு அடிப்படையிலும் வீட்டுவரி ரசீது வழங்கப்பட்டு வந்தது என்பதால் அதன் தொடர்ச்சியாக நான் பணிக்கு வந்தபிறகு ஏற்கனவே ரசீது தாக்கலாகியிருந்ததால் நானும் ரசீது வழங்கினேன். அதனால் வீட்டுவரி ரசீதானது பட்டாவின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா அல்லது குடியிருப்பின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. 2024-2025 வருடத்திற்கு வழங்கப்படும் வீட்டுவரி ரசீதுகளானது

முறையாக ஆவணங்களை சரிபார்த்த பிறகு தான் வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே வழங்கப்பட்ட ரசீதுகளுக்கு தொடர்ச்சியாக அவ்வாறே பணம் செலுத்தும்போது ரசீது கணிணியில் பதிவாகிவிடுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 10.10.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.10 19:11:50 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.